**பக்கம் 1:**
மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான்
# அவர்கள் விண்ணப்பத்தை
# கேட்டேன்

பெரியவர்களுக்கான பாட ஆதாரம் எழுதியவர் கமிஷனர் பிரேமா வில்பிரட் (**R**) பெரியவர்
*இந்திய தென்மேற்கு மாகாணம்*

'இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் ' (யாத்திராகமம் 2:23-24).

## வரிசை 1:

### அறிமுகம்

நாம் உலகில் எங்கு வாழ்ந்தாலும், நம்மை சுற்றி நவீன அடிமைத்தனமும் மனித கடத்தலும் நடந்து கொண்டு இருக்கிறது. அது வீடுகளிலும், சுற்றுபுறங்களிலும், கிராமங்கள், நகரங்கள் மற்றும் நாடு முழுவதிலும் நடந்துகொண்டிருக்கிறது.

### குழு செயல்பாடு 15 நிமிடங்கள்

நவீன அடிமைத்தனமும் மனித கடத்தல் பற்றி உங்களுக்கு தெரிந்தது என்ன? சிறு குழுக்களூாக உங்களுக்கு தெரிந்ததை விவாதித்து எழுதுங்கள். அவர்கள் விவாதித்ததை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொள்ள நேரம் எடுத்துகொளடளுங்கள்.

### அடிமைத்தனம் என்றால் என்ன?

அடிமைத்தனம் என்பது ஒருவர் மற்றொருவரை தன் பொருளாகவோ உடமையாகவோ நினைத்து கட்டுப்படுத்துவது ஆகும். அது மிரட்டிழயோ உடல்ரீதியான வன்முறை மூலமோ, உணர்ச்சி, உளவியல் மற்றும் ஆன்மீக ரீதியிலோ இருக்கலாம்.

## வரிசை 2:

நிதி. மக்கள் அடிமைத்தனத்தை அனுபவிக்கும்போது சுரண்டபடுகிறார்கள். அது அவர்கள் மற்றொருவரின் சுயநலம் மற்றும் இலாபத்திற்காக நியாயமற்ற முறையில் நடத்தபடுவதை குறிக்கிறது.

அடிமைபடுத்தபட்ட மக்கள் மனிதாபிமற்ற முறையில் மற்ற பொருட்களை போல நடத்தப்படுகிறார்கள். அவர்களுடைய அடையாளமும் தெரிவு செய்யும் திறனும் பறிக்கப்பட்டிருக்கும். அவர்கள் வாழ்க்கை கட்டுப்படுத்தபட்டதாக காணப்படும். அவர்களுடைய நம்பிக்கை, கனவு, அன்பிற்குரியவர்கள், அவர்களுடைய கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தை தியாகம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களுடைய வேலைக்கான சம்பளம் அவர்கள் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை. இது அவர்களுடைய சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை பறிக்கிறது.

2022 உலகளாவிய மதிப்பீடுகள் நவீன அடிமைத்தனம் மனித கடத்தலினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை எப்போதும் இல்லாத அளவாக 49.6 மில்லியன் உயர்ந்துள்ளதை குறிக்கிறது.

அடிக்குறிப்பு:
1. பெரியவர்களுக்கான வேதபாட ஆதாரம்

பக்கம் 2 :

வரிசை 1:

இது உலகளாவிய மதிப்பீடுகள்
27.6 மில்லியன் மக்கள் கடின உழைப்பையும் பாலியல் சுரண்டலையும் அனுபவித்து வருகின்றனர்.
22 மில்லியன் மக்கள் கட்டாய திருமணத்திற்குள்ளாக்கப்படுகின்றனர்.

அடிமைத்தனம் உலகம் எப்படி காணப்படுகிறது?

அடிமைத்தனம் உலகம் பல வழிகளில் காணப்படுகிறது. இங்கே சில உதாரணங்களை காணலாம்:

கிளினமின் தந்தை அவர்கள் கிராமத்தில் வேலையை இழந்தார். அவர்கள் குடும்பம் பெரியது மற்றும் அதிக குழந்தைகளுக்கு உணவளிக்கவேண்டி இருந்தது. பக்கத்து வீட்டுகாரர் கிளினத்தை ஒருவருக்கு அதிக சம்பளம் தரும் வேலையையும் பள்ளிபடிப்பை முடிக்கும் வாய்ப்பையும் அளித்து அவருக்கு அறிமுகப்படுத்தியபோது, அது தன் குடும்பத்திற்கு உதவும் என நினைத்தார். ஒருமுறை அவர் அங்கே சென்றபின் பள்ளிகூடத்திற்கு திரும்ப செல்லவில்லை. அதற்கு மாறாக தினமும் 12 - 14 மணிநேரங்கள் இறால் படகில் அடியாளத்திற்கு சென்று வலைகளை அவிழ்த்துவிடும் பணியை சம்பளமில்லாமல் சிறிது உணவிற்காக செய்தார்.

போராளிகள் படையெடுத்து நகரத்தை தாக்கியபோது பேட்மேயின் குடும்பம் அந்த நகரத்தை விட்டு வெளியேறியது. அகதிகள் முகாமில் தங்கியிருக்கும்போது குடும்பத்தின் எதிர்ப்பை மீறி பேட்மேயிக்கு திருமணம் செய்து வைத்தார். தற்போது அவளுடைய வயதான கணவரும் மாமியாரும் அவள் வாழ்க்கையை கட்டுப்படுத்தினர் மற்றும் சம்பளமில்லாத வேலைக்காரியாய் நடத்தினர்.

ஷாலியின் புதிய காதலன் அழகாகவும் வசீகரமாகவும் இருக்கிறான். எப்போதும் அவன் அவளுக்கு பரிசுகளை கொடுத்து கொண்டிருந்தான். அவன் அவளை மிகவும் நேசித்ததாக உணர வைத்தான். அவள் எப்போதும் தன்னையும் தனக்கு சொந்தமான பொருட்களையும் கவனித்துக்கொள்ள ஒருவரை தேடிக்கொண்டிருந்தாள். சில வாரங்களுக்கு பிறகு அவளுடைய காதலன் தான்கொடுத்த அனைத்தையும் திரும்ப தரும்படியும் தன் நண்பர்களுக்கு உடலுறவை கொடுத்து தனக்கு உதவும்படியும் கேட்டுக்கொண்டான். அவள் அதிலிருந்து வெளியேற நினைத்தபோது அவன் கோபபட்டு அவளையும் அவள் குடும்பத்தையும் தாக்கப் போவதாக மிரட்டினான்.

**வுரிசை 2:**
**வேதாகமம் என்ன சொல்லுகிறது?**
யாத்திராகமம் 2:23-24

அறிமுகம்:
யாத்திராகமம் புத்தகம் யாவே வரற்றிலிருந்து விலகி நிற்காமல் ஒடுக்கினவர்களை நியாயம் திர்ப்பதிலும் ஒடுக்கப்பட்டவர்களை விடுதலையாக்குவதிலும் ஈடுபட்டதை வெளிப்படுத்துகிறது. அவர் உலகத்திலுள்ள அனைத்து அரசர்களையும்விட வலிமையானவர் என்பதை காண்பிக்கிறது. யாத்திராகமம் புத்தகம் யாவே மக்களை எல்லவிதமான அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பவர் என்பதையும் இரட்சிப்பு, நம்பிக்கை, சுகம், மகிழ்ச்சி மற்றும் விடுதலை தருகிறவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

விவாத கேள்விகள்
- எபிரேயர்கள் எகிப்தில் எப்படி அடிமைகளானார்களள்?
- ஆதியாகமத்தில் யோசேப்பின் கதையில் உனக்கு தெரிந்தது என்ன?

யாத்திராகமத்தின் ஆரம்பம் அந்த நேரத்தில் இஸ்ரவேலர் அனுபவித்து கொண்டிருந்த போராட்டம், நெருக்கம் மற்றும் அடிமைதனத்தின் சூழ்நிலையை அறிந்துகொள்ள உதவுகிறது. இந்த அந்நிய தேசத்தில் இஸ்ரவேலர்களின் வரலாறை திரும்பி பார்க்கும்போது, அது தன் சகோதரர்களால் அடிமையாக விற்க்கப்பட்ட யோசேப்பின் மனித கடத்தல் காரணமாக அமைகிறது. பார்வோனுக்கு அடிமையாக இருந்ததின் நிமித்தமாக யோசேப்பு கடினமான சூழ்நிலைகள், வலிகள் மற்றும் நெருக்கத்தை அனுபவித்த போதிலும் கடவுள் யோசேப்பின் வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். கடவுள் யோசேப்பை விடுவித்து எகிப்தின் உயர்ந்த தலைவராக மாற்றினார். பஞ்சகாலத்தில் யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்து எகிப்தில் குடியிருக்க உதவினார்.

யோசேப்பின் மறைவிற்கு பிறகு புதிய பார்வோன் அதிகாரத்திற்கு வந்தார், எகிப்தியர்கள் எபிரேயரின் பெருக்கத்தை கண்டு பயந்து அவர்களின் ஆண் குழந்தைகளை கொன்றனர். ஆனால் கடவுள் தன் திட்டத்திற்காக மோசேயை காப்பாற்றினார். இஸ்ரவேலர்கள் அதிக எண்ணிக்கையில் பெருகுவதை கண்ட எகிப்பியர்கள் அவர்களை அடிமைகளாக்கி கட்டாய வேலை செய்ய வைத்தனர்.

அடிக்குறிப்பு:

2. பெரியவர்களுக்கான வேதபாட ஆதாரம்

**பக்கம் 3:**
**வரிசை 1:**

இஸ்ரவேலர்கள் எகிப்தின் குடிமக்களாகி அந்த நாட்டை கட்டி வளர்ச்சியடைய செய்தனர். அவர்கள் நீண்ட நாட்களாக மனிதர்களாக கருதபடாமல் அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர் - அவர்கள் வாழ்க்கை கடினமாக நீதியற்ற நிலை, சமத்துவமின்மை, வலி மற்றும் கசப்புகளால் நிறைந்திருந்தது. அங்கே பார்வோனின் அதிகாரத்திற்கும் நீதிக்கான போராட்டத்திறங்கும் நேரடியான சவால் இல்லை. வலி மற்றும் கசப்புகளிலிருந்து அவர்கள் அடிமைதனத்திலிருந்து பெருமூச்சுகளோடு கர்த்தரிடம் முறையிட்டார்கள். (யாத்திராகமம் 2:23)

விவாத கேள்விகள்

இஸ்ரவேலரின் விண்ணப்பத்திற்கு கடவுள் எவ்வாறு பதிலளித்தார்?
அதிகாரம் 2:24-25 இஸ்ரவேலரின் விண்ணப்பத்திற்கு கடவுள் பதிலளித்ததை விளக்குகிறது

**அவர் அவர்களின் முறையீட்டை கேட்டார்** - புதிய உலக பதிப்பில் பெருமூச்சு என்பது அழுகையோடு தொடர்புடையதாக இருக்கிறது. அந்த நேரத்தில் எபிரேயர்களிடத்தில் தலைவர் இல்லை. அவர்கள் நம்பிக்கையற்றவர்ளாக உதவியற்றவர்களாக இருந்தனர். ஒரே ஒரு காரியம் அவர்கள் கர்த்தரிடம் முறையிட்டார்கள். அவர்களின் விண்ணப்பம் இந்த உலகத்தையும் மனித குலத்தையும் படைத்த கடவுளிடம் சென்றது மற்ற கடவுள்களிடம் அல்ல. அவர்களின் முற்பிதாக்களின் கடவுளிடம் முறையிட்டனர். சங்கீதம் 50:15 சொல்லுகிறது, ஆபத்துகாலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைபடுத்துவாய். கடவுள் அவர்கள் முறையீட்டை கேட்டார். கடவுள் எல்லா மக்களின் முறையீட்டை கேட்கிறவர். .

கர்த்தர் அவர் உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் - வசனம்

வரிசை 2:

நினைவுகூர்தல் எபிரேயத்தில் சக்கர் ஆகும். இது யாத்திராகமம் புத்தகத்தின் இறையியல் கருப்பொருளாகும். எபிரேயத்தில் நினைவுகூர்தல் என்பது அறிவார்ந்த பயிற்சி மட்டுமல்ல ஞாபகத்தில் கொள்ளுதல் என்பதாகும். கர்த்தர் ஆபிரகாமுக்கும்

அவா் சந்ததிக்கும் நிபந்தனையற்ற வாக்குறுதி கொடுத்திருந்தாா். அவா் உண்மையுள்ளவா். நீண்ட காலமானாலும் தன் வாக்குறுதியை நிறைவேற்றுபவா்.

அவா் அக்கறையோடிருந்தாா் - கடவுள் கேட்பவா் மற்றும் நினைவில்கொள்ளுபவா் அல்ல மாறாக அக்கறைகொள்பவா். இஸ்ரவேலின் தேவன் அவா்களின் நிலையை அறியாதவரோ அடிமைதனத்திலிருந்து காப்பாற்ற விரும்பாதவரோ அல்ல. தனது ஜனங்களை எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுவிக்க திட்டமிட்டாா். கேட்பது மற்றும் நினைவில்கொள்ளுதல் மற்றும் அக்கறைகொள்ளுதல் அவரின் உண்மையையும் தன்னுடைய படைப்பின் மீதான கருணையையும் காண்பிக்கிறது.

யாத்திராகமம் புத்தகத்தில் வாசிக்கும் போது உலகம் முழுவதும் அடிமைத்தன நிலையில் இருக்கும் மக்கள் தனியாக இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இருளிலிருந்து அவா்கள் விண்ணப்பிப்பதை கா்த்தா் கேட்பாா், அவா்களை வெளிச்சத்திற்கு அழைத்துவர அவா்களை நினைத்திருக்கிறாா் மற்றும் அக்கறையோடிருக்கிறாா்.

இரண்டு பக்கங்களில் :

அவா்களின் விண்ணப்பம் இந்த உலகத்தையும் மனித குலத்தையும் படைத்த கடவுளிடம் சென்றது மற்ற கடவுள்களிடம் அல்ல.

அடிக்குறிப்பு:

3. பெரியவா்களுக்கான வேதபாட ஆதாரம்